1981 ஏப்ரல் 28]

கும்பகோணம் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்யும் திட்டம்

*வினா எண் 916—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்ய அரசு குறிப்பு ஏதேனுமுண்டா?

(ஆ) புதிய இடத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) எப்போது கட்டுமானப் பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) விரைவில் துவக்க நகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேருந்து நிலையம் கும்பகோணம் மையப் பகுதியில் அமைந்துள்ளது. பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பேருந்து நிலையத்தை மாற்ற வேண்டியது அவசியமாக இருந்தாலுங்கூட, மையப் பகுதியிலேயிருப்பதை கவனத்திலே கொண்டு, அருகிலே உள்ள காவலர் இல்லங்கள்—போலீஸ் குவார்ட்டர்ஸ்—சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அந்தக் கட்டிடங்கள் எல்லாம் இடிந்த நிலைமையிலேயிருக்கின்றன. அந்தக் காவலர் இல்லங்களை, இடித்துப் பேருந்து நிலையத்தோடு சேர்த்தால், அதுவே பேருந்து நிலையத்திற்குப் போதுமானதாக இருக்கும். எனவே, புதிதாக ஆக்கிரமித்துள்ள இடத்தைக் காவலர் இல்லங்கள் கட்டித்தரவும், பழைய பேருந்து நிலையத்தை காவலர் இல்லங்களோடு சேர்த்து விஸ்தரிக்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே. கும்பகோணத்திலே புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக இப்பொழுது 7 எக்கர் 58 சென்ட் அரசின் மூலமாக நகராட்சியால் பெறப்பட்டிருக்கிறது. ஆனால், மொத்த அளவான 10 எக்கர் 43 சென்ட் பெற வேண்டுமென்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக ரூபாய் 50 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, சுருக்கமாக நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்ட வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1981 ஏப்ரல் 28

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே, இரண்டு ஆண்டுக்காலத்திற்கு முன்னால்தான் மகாமக விழாவையொட்டி, ஏறத்தாழ பல இலட்சம் ரூபாய் செலவு செய்து இப்பொழுதிருக்கிற பேருந்து நிலையத்தில் புதிய கட்டிடங்கள் கட்டி இருக்கிறார்கள், கடைகள் எல்லாம் புதிதாக அமைத்திருக்கிறார்கள். இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில் அந்த இடத்தை விட்டு, புதிய இடத்திற்கு மாற்றுவதால், அரசு பல இலட்சம் ரூபாய் வீணாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், தற்போதுள்ள பேருந்து நிலையம் கும்பகோணத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. காவலர் இல்லங்கள் எல்லாம் இடிந்து போயிருக்கின்றன. அங்கே கூட கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலத்திற்கு மேலிருக்கிறது. அதை எடுத்து விஸ்தரித்தால் போதுமானதாக இருக்கும். எனவே, அரசு மறுபரிசிலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் பொது மக்களுக்கு வசதியாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த 10 ஏக்கர் 43 சென்ட் இடத்தைப் பார்வையிட்டு அதை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, பொதுவாக திட்டங்கள் திட்டப்படுகிற நேரத்தில் இன்னும் 20 ஆண்டுகளுக்குப் பின்னாலே மக்கள் தொகை எவ்வளவு இருக்கும்? ஆகவே, அங்கே இருக்கக்கூடிய நகரம் எவ்வளவு விரிவடையும் என்பதை எல்லாம் நோக்கிலே கொண்டுதான் இந்தத் திட்டங்கள் எல்லாம் தீட்டப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திற்கு நான் அண்மையில் சென்று இருந்தேன். தமிழக அரசின் சார்பில் நடைபெறுகின்ற போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக புதிய புதிய பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் விடப்பட்டு இருப்பதால், அந்தப் பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் நிற்பதற்கு இடம் இல்லாமல், சில நேரங்களில் உள்ளே செல்வதற்கே ½ மணி நேரம் ஆகிறது. ஆகவே, தற்போதுள்ள பேருந்து நிலையத்தை பெருநகர் பேருந்து நிலையமாக வைத்துக் கொண்டு, புற நகர் பேருந்துகளுக்கு வசதியான முறையில் புதிய பேருந்து நிலையம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற பேருந்து நிலையம் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது, பொது மக்களுக்கு வசதியாக இல்லை என்ற காரணத்தினால்தான், புதிய பேருந்து நிலையம் வசதியான இடத்தில் கட்ட வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டு இருக்கிறோம். குறிப்பாக, இந்தக் கும்பகோணம் பஸ் நிலையத்தைப் பொறுத்தவரையில், அதன் உள்ளே 50 பஸ்கள் ஒரே நேரத்தில் நிற்கும் அளவிற்கு (It becomes 'A' Class Bus-stand அது போன்ற ஒரு இடத்தை பெறும் சூழ்நிலை அதற்கு இருக்கிறது.

சின்னமனூர் அரசு மருத்துவமனை.

*வினா எண் 917 திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னமனூர் நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள அரசினர் மருத்துவமனை எப்போது செயல்பட ஆரம்பிக்கும்?

(ஆ) ஓடைப்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) சின்னமனூரில் அரசினர் மருத்துவமனை 1—2—1981 ஆம் நாளிலிருந்து இயங்குகிறது.

(ஆ) ஓடைப்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம் 31—10—1980 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, சின்னமனூர் நகராட்சியில் ஆரம்பிக்கப்பட்டு இப்போது நடந்து வரும் மருத்துவ மனைக்கு உடனடியாகக் கட்டிடம் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எம். எஸ். 1945, ஹெல்த், தேதி 3—11—1979-ல் கண்டுள்ள உத்தரவின்படி ஏற்கனவே சின்னமனூரில் இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையம் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக இயங்க வேண்டும் என்று ஆணையிடப்பெற்று, 6—2—1981-ல் இருந்து அது துவங்கி நடந்து வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS